ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2133/5 - 2019 ජූලි මස 22 වැනි සඳුදා - 2019.07.22

*2133/5 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின்கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி பதில் கடமைபுரியும் அமைச்சர் லக்கி ஜயவர்தன ஆகிய நான், குறித்த சபைக்கு அங்குணுகொலபெலஸ்ஸ புதிய சிறைச்சாலைக்கு குடிநீர் வசதியினை வழங்குவதற்காக அம்பலன்தொட்டை உவர் நீர் தடுப்பின் தெற்குக் கரையிலிருந்து புஹுல்யாய வீதிக்கான நுழைவு வரை நீர்க்குழாய் பதித்தல் மற்றும் உட்செல்லும் பாதையை நிர்மாணித்தல் ஆகியவற்றிற்காக 03 காணிப்பகுதிகளை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள 03 காணிப்பகுதிகளினதும் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

*லக்கி ஜயவர்தன,*<br>
*பதில் கடமை புரியும் நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும்*<br>
*உயர் கல்வி அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,*<br>
*இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,*<br>
*பெலவத்தை,*<br>
*பத்தரமுல்லை,*<br>
*2019, யூலை 05.*<br>
*5/2/2/1480.*

**அட்டவணை**

*ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில், அம்பலன்தொட்டை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 146, புஹுல்யாய கிராம அலுவலர் பிரிவில், நவாலுவில கிராமத்தில் அமைந்துள்ள 12 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள 3 காணிப்பகுதிகள்.*

***1. துண்டு எழுத்து : A ; விஸ்தீரணம் : 2 பேர்ச்சஸ்***

வடக்கு : திருமதி கே. எம். கமலாவதி உரிமை கோருகின்ற காணி மற்றும் துண்டெழுத்து B ;
கிழக்கு : பாதுகாப்பு சுவர் ;
தெற்கு : தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை உரிமை கோருகின்ற உவர் நீர் தடுப்புக் காணி, பாதுகாப்பு சுவர் மற்றும் வளவ கங்கை ;
மேற்கு : திருமதி சாமிலா சிரிவன்தி உரிமை கோருகின்ற காணி.

*காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் :*

1. திருமதி சாமிலா சிரிவன்தி,
புஹுல்யாய வீதி,
அம்பலன்தொட்டை.

***2. துண்டு எழுத்து : B ; விஸ்தீரணம் : 3 பேர்ச்சஸ்***

வடக்கு : திருமதி கே. எம். மல்லிகா உரிமை கோருகின்ற காணி மற்றும் துண்டெழுத்து C ;
கிழக்கு : பாதுகாப்பு சுவர் ;
தெற்கு : பாதுகாப்பு சுவர் மற்றும் வளவ கங்கை ;
மேற்கு : திருமதி கே. எம். கமலாவதி உரிமை கோருகின்ற காணி.

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :*

1. திருமதி கே. எம். கமலாவதி,
புஹுல்யாய வீதி,
அம்பலன்தொட்டை.

***3. துண்டு எழுத்து : C ; விஸ்தீரணம் : 7 பேர்ச்சஸ்***

வடக்கு : திருமதி கே. எம். மல்லிகா உரிமை கோருகின்ற காணி மற்றும் ஆற்றங்கரை வீதி ;
கிழக்கு : பாதுகாப்பு சுவர் மற்றும் வளவ கங்கை ;
தெற்கு : பாதுகாப்பு சுவர், வளவ கங்கை மற்றும் துண்டெழுத்து B ;
மேற்கு : திருமதி கே. எம். மல்லிகா உரிமை கோருகின்ற காணி.

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :*

1. திருமதி கே. எம். மல்லிகா,
புஹுல்யாய வீதி,
அம்பலன்தொட்டை.

*08-205*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.